

26.10.2026 செய்திகள்

ஆபரேஷன் ட்ரைடென்ட்

- அஸ்ஸாம், மிஸோரம், மணிப்பூர் மாநிலங்களில் சர்வதேச போதைப் பொருள் கடத்தலுக்கு எதிராக ஆபரேஷன் ட்ரைடென்ட் என்ற பெயரில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
- இந்தியா-மியான்மர்-வங்கதேசம் இடையே செயல்பட்டு வந்த சர்வதேச போதைப்பொருள் கடத்தல் கும்பலுக்கு எதிராக ஆபரேஷன் ட்ரைடென்ட் மேற்கொள்ளப்பட்டது.
- போதைப்பொருள் கடத்தலுக்காக ரூ.100 கோடி மதிப்பிலான ஹவாலா பணப்பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டது.
- இந்தக் கும்பல் இந்தியா-மியான்மர்-வங்கதேசம் எல்லை வழியாக போதைப் பொருளைக் கடத்தி வந்தது.
- இந்த நடவடிக்கையை மேற்கொண்ட மத்திய அரசு முகமைகள் மற்றும் 3 மாநிலங்களின் காவல் துறைகளை உள்ளடக்கிய போதைப் பொருள் தடுப்பு குழுவுக்குப் பாராட்டுகள்.
- ஆபரேஷன் ட்ரைடென்ட் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, தேசிய போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் (என்சிபி) 38 குழுக்கள் அஸ்ஸாம், மிஸோரம் மற்றும் மணிப்பூர் மாநிலங்களில் ஒரே நேரத்தில் அதிரடி சோதனைகள் மேற்கொண்டது.

ஒடிஷாவில் ஆர்பிஐ தரவு மையம்

- மகாராஷ்டிர தலைநகர் மும்பையில் ரிசர்வ் வங்கியின் தலைமை அலுவலகம் செயல்படுகிறது. இயற்கை பேரிடர் உள்ளிட்ட காரணங்களால் மும்பை அலுவலகத்துக்கு சேதம் ஏற்பட்டால் நாடு முழுவதும் வங்கிச் சேவைகள் பாதிக்கப்படக்கூடும்.
- எனவே மாற்று ஏற்பாடாக ஒடிசா தலைநகர் புவனேஸ்வரில் 18.55 ஏக்கர் பரப்பில், ரூ.169 கோடி செலவில் ஆர்பிஐ தரவு மையம், சைபர் பாதுகாப்பு பயிற்சி மையம் அமைக்கப்பட்டு உள்ளது.